**செய்தி வெளியீடு எண் : 2386** **நாள் : 29.12.2022**

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய விழா

### மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை

**திருச்சிராப்பள்ளி (29.12.2022)**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், பெண்கள் பொருளாதாரத்தில் சுயசார்பு பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், 1989–ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விதைத்த விதைதான் இன்று பல லட்சக்கணக்கான மகளிர் பயனடையும் இந்த சுயஉதவிக் குழு இயக்கம் அதன் பிறகு 1996–ஆம் ஆண்டில் மீண்டும் கழக ஆட்சி அமைந்த பிறகு, இந்த இயக்கம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு, இன்று தமிழகத்தில் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை நாம் உருவாகி உள்ளோம். இன்று தமிழ்நாடு முழுவதும், கிட்டதட்ட 4 லட்சம் குழுக்கள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற அளவிலான மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 2021–2022 ஆண்டில் மட்டும் கிட்டதட்ட 16 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. மகளிர் திட்டத்திற்கென தனியாகத் தலைமை அலுவலகத்தை உருவாக்கித் திறந்து வைத்து, அக்கட்டடத்திற்கு **'அன்னை தெரசா மகளிர் வளாகம்'** என்று பெயர் சூட்டி மகிழ்ந்தவரும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்,

**திராவிட மாடல் ஆட்சியில்,** மற்ற துறைகளில் நாம் முதன்மை பெற்றுள்ளதைப் போலவே இந்த மகளிர் சுய உதவிக் குழு இயக்கமும் முதன்மையானதாகச் செயல்பட்டு வந்துகொண்டிருக்கின்றது. சுய உதவிக் குழு இயக்கம், தமிழ்நாட்டிற்கான முன்னோடித் திட்டமாக மட்டுமல்ல இந்தியாவுக்கே முன்னோடித் திட்டமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படக் காரணமே இங்கு வந்திருக்கின்ற தாய்மார்கள்தான். இந்த பெருமை அத்தனையுமே உங்களைத்தான் சேரும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவான சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றியானது, பிற மாநிலங்களையும் ஈர்த்து, அதுமட்டுமல்லாமல், பிறமாநிலங்களிலும் சுய உதவிக் குழுக்கள் உருவாகக் காரணமாக அமைந்தது. தமிழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்திக் காட்டிய இந்தத் திட்டம்தான் காரணம்.

நம்முடைய முத்தமிழறிஞர் இந்தத் திட்டத்தை கொண்டு வந்தார் என்றால், அவர்களுடைய வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டிற்காக கிட்டதட்ட 100 மணி நேரத்திற்கும் மேலாக நின்றுகொண்டே தனது கரங்களால் பல்லாயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கி, இந்தத் திட்டத்தை அனைத்து மகளிரும் பயனடையும் வகையில், கொண்டுபோய் சேர்த்தார். 2021–ல் திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடன், ஏறத்தாழ 16 லட்சம் மகளிர் பயனடையும் வகையில்,

2800 கோடி மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களைத் தள்ளுபடி செய்தவரும் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியினுடைய முதலமைச்சர்தான் இன்று இந்த நிகழ்ச்சிக்கு மட்டுமல்ல, நம் தமிழ்நாட்டிற்கே தலைமையேற்று வழி நடத்திக்கொண்டிருக்கிறார்.

'**உங்களில் ஒருவன்**' என்பதுதான் நம்முடைய முதல்வர் அவர்களின் சுயசரிதைப் புத்தகம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உண்மையிலேயே உங்களில் ஒருவர் என்பதை, என்னை விட மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த நீங்கள் நன்கு அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

பெண்கள் நலம் நாடும் நம் அரசானது, பெண்கள் சமூகம், பொருளாதார முன்னேற்றம் அடைந்து, சுயசார்பு பெற்று, ஆற்றல்மிக்கவர்களாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன் எண்ணற்ற திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார் நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள்.

2021ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே , தலைவர் அவர்கள் வாக்குறுதிக் கொடுத்திருந்தார். தி.மு.க. ஆட்சி அமைந்தால், மகளிருக்கான கட்டணமில்லா பஸ் திட்டம் செயல்படுத்தப்படும் எனக் கூறியிருந்தார். அனைத்து எதிர்க்கட்சியினரும் வாய்ப்பே இல்லை என்று சொன்னார்கள். ஆனால், 2021-ல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நகரப் பேருந்துகளில் மகளிருக்குக் கட்டணமில்லா பயணச் சலுகையை அளித்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இதுவரை கிட்டதட்ட 100 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு, பல லட்சக் கணக்கான மகளிர் இலவசப் பயண வசதியைப் பயன்படுத்தி வருகின்றனர். இன்னும் சொல்லப்போனால், சில கிராமங்களில் அந்த பஸ்சைப் பார்த்தால் நம் முதலமைச்சரின் பெயரைச்சொல்லி '**ஸ்டாலின் பஸ்**' என்றே செல்லமாக அழைக்கின்றனர்.

அதேபோல் '**புதுமைப்பெண் திட்டம்**, என அரசுப் பள்ளியில் படித்த மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி, மகளிர் முன்னேற்றத்தில் மாபெரும் புரட்சியை கல்வியின் வாயிலாக நிகழ்த்திக் காட்டிக்கொண்டிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அதே உணர்வுடன் தான், கடந்த ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கான பிரத்யேகமாக நடைபெற்ற நிகழ்ச்சியில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கலந்துகொண்டு மகளிர் சுய உதவிக்குழுவினருடன் காணொலி வாயிலாகக் கலந்துரையாடி, மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கி சிறப்பித்தார்கள். அதேபோல், 2021-22-ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்காக 20,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட, அதிகமாக 21,392 கோடி ரூபாயை 4 லட்சம் பயனாளிகளுக்கு கடனுதவியாக வழங்கிய சாதனையை பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

மேலும், இந்த 2022-23 நிதியாண்டில் ரூ.25,000 கோடி கடன் இணைப்பு சுய உதவிக் குழுக்களுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அந்த இலக்கை வருகின்ற 2023-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் எந்த மாவட்டத்தில் அரசு விழா நடைபெற்றாலும், அங்கு அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் அரங்குகளைப் பார்வையிட்டு, அங்குள்ள சுயஉதவிக் குழுவினரிடம் உரையாடுவதை வழக்கமாக கொண்டுள்ளார். அதேபோல் இன்று நானும் அந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளேன் என்பதைப்பெருமையோடுதெரிவித்துக்கொள்கிறேன்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்த ஊக்கத்தால் இன்றைய தினம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வெற்றிகளை பெற்று வருகின்றனர். கோவை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் இயற்கையோடு இணைந்து வாழும் மலைவாழ் மக்களின் குழுவின் உன்னத தயாரிப்புகளான உண்ணிச்செடி மரச் சாமான்கள், சிவகங்கை மாவட்டம் சிப்காட் வளாகத்தில் கடல் பாசியை உலர்த்தி அரைத்து வழங்குவதற்கான தொழிற்சாலை, வெள்ளிக் கொலுசு தயாரிப்பில் ஈடுபட்டு வரும் சேலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள், செங்கல்பட்டு மாவட்டத்தில் 12 ஏக்கர் இயற்கை வளாகத்தில் மூலிகைத் தோட்டம் அமைத்து மூலிகை மருந்துகளை உற்பத்தி செய்யும் இருளர் பழங்குடியின மக்கள், சுவையான சிறுதானிய திண்பண்டங்களைத் தயாரிக்கும் சென்னை திருநங்கையர் குழுக்கள், வயதானதால் ஓய்ந்து விடாமல் குழுவாக இணைந்து தென்னை ஓலையில் பொருட்களைத் தயாரிக்கும் கிருஷ்ணகிரி மாவட்ட முதியோர் குழுக்கள், சிறுதானிய உற்பத்தியில் முன்னிலை பெற்றுள்ள தருமபுரி மாவட்ட சுய உதவிக் குழுக்கள், சமுதாயத் திறன் பயிற்சிப் பள்ளியில், பயிற்சி பெற்று வாழைநாரில் மதிப்புக் கூட்டுப் பொருட்களைத் தயாரித்து வரும் தூத்துக்குடி குழுக்கள், தடைகளைத் தாண்டி நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டு சிறந்த தொழில்முனைவோராகத் திகழும் தேனி மாவட்ட சுயஉதவிக் குழு உறுப்பினர்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்பட்ட சுய உதவிக் குழுவினரின் பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணை, உலகப்புகழ் பெற்ற தஞ்சாவூர் தலையாட்டி பெம்மைகள் தயாரிக்கும் குழுக்கள் மற்றும் இளைஞர் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் வெல்டிங் பணி, மருத்துவ உதவியாளர், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் போன்ற எண்ணற்ற வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ள இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரும் சுய உதவிக் குழு இயக்கத்தால் வளமான வாழ்வாதாரம் பெற்றுள்ளனர் என்னும் சாதனைகள் எனக்கு பெரிதும் வியப்பு அளிக்கின்றன. இதுவரை நான் மேலே குறிப்பிட்டவையெல்லாம் சுய உதவிக் குழுக்கள் என்னும் பெருங்கடலின் சிறுதுளிகள் தான்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் குடும்ப நலன் மற்றும் சுகாதாரத் துறை இணைந்து செயல்படுத்தும் **"மக்களைத் தேடி மருத்துவம்"** என்ற திட்டத்தில் சுய உதவிக் குழு மகளிர் மூலம் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளிக்கூடம் செல்லும் மாணவ–மாணவியரின் பசியைப் போக்கிடும் வகையில், **"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்"** அதிலும் சுய உதவிக் குழுக்களுக்கு தரமான சமையல் பயிற்சியை வழங்கி, அவர்களின் மூலம் காலை உணவு தயாரித்து, மாணவ – மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதுபோல நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுக்கள்தான் அரசு திட்டங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

எண்ணற்ற நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் இங்கு நடைபெறும் நிகழ்ச்சியில்• 42,081 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 6,48,763 மகளிர் பயனடையும் வகையில் 2,548 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள், மற்றும் சிறப்பாக செயல்படும் 33 சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகளுக்கு **'மணிமேகலை விருது'கள்** வழங்கப்படுகின்றன. மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட 8 வங்கிகளுக்கு **'வங்கியாளர் விருது'** போன்றவை வழங்கி சிறப்பிக்கவுள்ளார்கள். சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் மணிமேகலை விருதுகள், முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சிக் காலமான 2006–2007–ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

விருதுகள் என்பது புத்துணர்வு ஊட்ட, ஊக்கப்படுத்த, இன்னும் சிறப்பாக செயல்பட வைக்க என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்று நான் நம்புகிறேன். விருது பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கும், வங்கியாளர்களுக்கும் என் வாழ்த்துகள்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில், அள்ள அள்ளக்குறையாத அட்சய பாத்திரத்தைக் கொண்டு மணிமேகலை ஏழை எளியோரின் பசியைப் போக்கினார் என்று ஒரு கதை சொல்லப்பட்டிருக்கும். அது உண்மையோ, பொய்யோ.. ஆனால்.. **திராவிட மாடல் எனும் அட்சயபாத்திரத்தைக் கொண்டு** ஏழை எளிய மக்கள், மகளிரின் முன்னேற்றத்திற்காக திட்டங்களைத் தீட்டி நிதி நெருக்கடிகளுக்கு இடையிலும் செயல்படுத்தி வருகிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அத்தகைய திட்டங்களை கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் மகளிரிடமும் கொண்டு சேர்க்க வேண்டியது நம்முடைய கடமை.. அதை உணர்ந்து நாம் பணியாற்றுவோம். சுய உதவிக் குழுகளினால் கிடைக்கும் கடனுதவி என்பது வெறும் மகளிர் முன்னேற்றத்துக்கானது மட்டுமல்ல, அந்த கடனுதவிகள் எத்தனையோ கல்வி கற்காத பெண்களுடைய குழந்தைகளுக்கான உயர்கல்விக் கட்டணம். அந்த கடனுதவிகள்தான், விளிம்புநிலை குடும்பங்களின் இக்கட்டான சூழலில் அவர்களின் அவசர உதவிக்குக் கைக்கொடுக்கும் கரம். அந்த கடனுதவிகள்தான், எத்தனை குடும்பங்களின், மருத்துவ செலவுக்காக பயன்பாட்டிற்கான உயிர் காக்கும் தொகை என நினைத்து பார்க்கையில் இந்த மகளிர் சுய உதவிகுழுக்களின் செயல்பாடின் அவசியத்தை நாம் உணர முடியும். ஆகவே இந்த திட்டத்தை, பயனடையாத ஏழை எளிய விளிம்பு நிலை மகளிர் இல்லை எனும் நிலையை உருவாக்கும் வகையில், இதையே எல்லையாக வைத்து செயலாற்றவும் நினைக்கிறேன். ஏறத்தாழ அனைத்து கிராமங்களையும் சென்று சேர்ந்த இந்த இயக்கம் அனைத்து மகளிரையும் சென்றடையும் வகையில், தொடர் முன்னெடுப்புகளை முதலமைச்சருடைய வழிகாட்டலில் மேற்கொள்ளவுள்ளோம்.

நிறைவாக உங்களிடம் ஒன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். அதுஎன்னவென்றால் **"உழைத்தால் மட்டுமே வாழ்வில் நல்ல நிலையை அடைய முடியும்"** என்பதற்கு நமது முதலமைச்சர் அவர்கள்தான் இங்கே எடுத்துக்காட்டாக இருக்கிறார். ஆகவே, நீங்கள் அனைவரும் உங்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசின் பல்வேறு நலத் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி, தொடர்ந்து உழைத்தால் நீங்களும் வெற்றி பெறப்போவது உறுதி.

இங்கே குறிப்பிட்டது போல இளைஞர் அணி செயலாளராக வந்திருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். அதையெல்லாம்விட பெருமை முத்லமைச்சருடைய மகனாக, தலைவருடைய மகனாக வந்திருக்கிறேன் அதைவிட பெருமை முத்தமிழறிஞர் கலைஞருடைய பேரனாக இங்கு வந்திருக்கிறேன் பலமுறை. இப்போது அமைச்சர் என்ற பொறுப்போடு வருகின்றேன் இதையெல்லாம் பொறுப்பாக எடுத்துக்கொண்டு பெருமைப்பட்டாலும், இதையெல்லாம்விட பெருமையாக நான் எப்போதுமே கருதுவது உங்கள் வீட்டு செல்லப்பிள்ளை இருப்பதுதான் எனக்கு மிக்கபெரிய பெருமை. இப்போது அமைச்சர் என்னும்பொறுப்பை தலைவர் அவர்கள் வழங்கியிருக்கிறார். செல்லப்பிள்ளையாக மட்டும் இல்லாமல் பொறுப்பான செல்லப்பிள்ளையாகவும் இருப்பேன் என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in